**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்**

**மோட்டார் வாகன விபத்து வழக்குகள்**

**சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்: I, விழுப்புரம்**

**முன்னிலை** : **திரு. N.**வெங்கடேசன், **D.C.BA.,M.L.,P.G.D.C.L.C.F.,**
சிறப்பு சார்பு நீதிபதி எண்.1
சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1,
(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்குகள்),
விழுப்புரம்.

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 30 ஆம் நாள் வியாழக்கிழமை.

**MCOP.No.182/2025**
**(CNR.No.TNVP07-000233-2025)**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Tr.CMP.No.264 முதல் 281/2020 மனுக்களில் 11.05.2020 தேதியில் பிறப்பித்த தீர்ப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பிறப்பிக்கபடும் உத்தரவு படிவம்:**

| | | |
|---|---|---|
| (1) | மனுதாரர் முகவரி | சிவபெருமாள் த/பெ ராகவன், வயது 61, எண்.3/414, ITI தெரு, அசோகபுரி, தும்பூர், விழுப்புரம். |
| (2) | 1 ஆம் எதிர்மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி: | யுவராஜ் த/பெ ஐயப்பன், எண்.3/398, பாடசாலை தெரு, பூங்குணம், விழுப்புரம். |
| (3) | 2 ஆம் எதிர்மனுதாரரின் பெயர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் முகவரி: | கிளை மேலாளர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், Ro, 3rd Party HUB, AR பிளாசா, 45 அடி ரோடு விரிவு, பாலாஜி நகர், புதுச்சேரி. |
| (4) | இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி | 21.04.2025 |
| (5) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி | 30.07.2026 |
| (6) | பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம் | ரூ.3,26,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தாறாயிரம் மட்டும்) |
| (7) | இழப்பீடு செலுத்த வேண்டிய எதிர்மனுதாரர் | மனுதாரருக்கு, 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (8) | வட்டி விகிதம் | ஆண்டிற்கு 7.5% 21.04.2025 தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை |
| (9) | இழப்பீடு தொகை வைப்பீடு மற்றும் வழங்குதல் | NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் |
| (10) | வழக்கறிஞர் ஊதியம் மற்றும் வழக்கு செலவுத்தொகை | வழக்கறிஞர் கட்டணம் ரூ.19,020/-, மனுதாரர் செலுத்திய நீதிமன்றக்கட்டணம் ரூ.373/- மற்றும் வழக்கு செலவுத் தொகை ரூ.74/- ஆகமொத்தம் ரூ.19,467/-ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. |
| (11) | மனு மீது செலுத்தப்பட்ட நீதிமன்றக்கட்டணம் | மனுதாரர் செலுத்தவேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.2,633/- மனுதாரர் நீதிமன்றக் கட்டணமாக ரூ.373/- செலுத்தியுள்ளார். மனுதாரர் செலுத்தவேண்டிய இழப்பீடு தொகைக்குரிய குறைவு நீதிமன்றக்கட்டணம் ரூ.2,260/- ஆகும். மனுதாரர் செலுத்த வேண்டிய குறைவு நீதிமன்றக் கட்டணம் ரூ.2,260/-ஐ 2ம் எதிர்மனுதாரர் தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு E-Court fees link pay.ecourts.gov.in என்ற இணையதளத்தின் மூலம் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. |

இம்மனுக்களானது கடந்த 22.07.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.வேலவன், அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.எல்.சுரேஷ், அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.தனராஜன். அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரான பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

08.03.2025 ஆம் தேதியன்று ஏற்பட்ட சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.20,00,000/- இழப்பீடு கோரி இம்மனு மனுதாரரால் எதிர்மனுதாரர்கள் மீது மோட்டார் வாகனங்கள் சட்டம் பிரிவு 166(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.31 10:47:18 +0530

2. **மனுவின் சுருக்கம்** :-

கடந்த 08.03.2025 ம் தேதியன்று இரவு சுமார் 7.00 மணியளவில் மனுதாரர் விழுப்புரம் - செஞ்சி நெடுஞ்சாலையில் அசோகபுரி பேருந்து நிறுத்தத்திற்கு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டை கடக்க நடந்து சென்றுக்கொண்டிருந்தபோது அச்சமயம் விழுப்புரம் - செஞ்சி மார்க்கமாக தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்துக்கொண்டிருந்த 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN38BS1870 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் மனுதாரருக்கு உடல் முழுவதும் பலவிதமான காயங்கள் ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவும், அதிவேகமும், அஜாக்ரதையும்தான் காரணம். விபத்து குறித்து விழுப்புரம் மாவட்டம், கெடார் காவல் நிலையத்தில் குற்ற எண்.44/2025 என்னும் வழக்கை பிரிவுகள் 281,125(a) இ.த.ச.வின்படி 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த மனுவின் மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து இழப்பீடாக ரூ.20,00,000/- வழங்க கோரியுள்ளார்.

**3. 1 ஆம் எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம்** :-

மனுவில் கூறப்பட்டுள்ளவை சரியானவை அல்ல. இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் கூறியுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை. விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு காரணம் என்பது மறுக்கப்படுகிறது. விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மிதமான வேகத்திலும் மிகுந்த கவனத்துடன் சாலையின் இடது புற ஓரமாக ஓட்டி வந்து கொண்டிருந்தபோது, மேற்படி சாலையின் மேற்கு திசையிலிருந்து வேகமாகவும், கவனக்குறைவாகவும், மனுதாரர் திடீரென சாலையை கடந்து மேற்படி இருசக்கர வாகனத்தில் அடிப்பட்டு விட்டார். விபத்திற்கு மனுதாரரே காரணம் ஆவார். விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரரிடம் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது. மனுதாரருக்கு நஷ்டஈடு வழங்க தீர்மானிக்கப்படும் நிலையில் மேற்படி 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற முறையில் மனுதாரருக்கு நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் ஆவார். எனவே இம்மனு இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும். மனுதாரரின் வயது, காயம், சிகிச்சை, தொழில், வருமானம், இழப்பு பற்றி கூறப்பட்டுள்ளவை மறுக்கப்படுகிறது. அவற்றை மனுதாரர் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். கோரியுள்ள இழப்பீடு அதிகமானது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4. 2 ஆம் எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம்** :-

மனுவில் கூறப்பட்டுள்ளவை சரியானவை அல்ல. இம்மனு நிலைக்கத்தக்கதல்ல.


N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 10:47:24 +0530

இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடிக்குரியது. மனுவில் கூறியுள்ளவாறு விபத்து நடைபெவில்லை. திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின்படி மனுதாரர் விபத்து வாகனத்தின் ஓட்டுநரை மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 166ன் கீழ் முறையான தீர்ப்பிற்காக தரப்பினராக சேர்க்கப்படவேண்டும். மனுதாரர் விபத்து வாகன ஓட்டுநரை அவசியதரப்பினராக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அவசியதரப்பினரை சேர்க்காத தோஷத்தால் மனு பாதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் சாலையைக் கடந்தபோது விபத்து நிகழ்ந்ததாக மனுதாரரே அளித்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தனது கவனக்குறைவால் விபத்தை வரவழைத்துக் கொண்டார். விபத்திற்கு 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு காரணம் என்பது மறுக்கப்படுகிறது. விபத்து சமயத்தில் 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் இருந்தது என்பதும், விபத்து சமயத்தில் 1 ஆம் வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பதும் மறுக்கப்படுகிறது. எனவே இம்மனு இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும். மனுதாரரின் வயது, காயம், சிகிச்சை, தொழில், வருமானம், இழப்பு பற்றி கூறப்பட்டுள்ளவை மறுக்கப்படுகிறது. அவற்றை மனுதாரர் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். கோரியுள்ள இழப்பீடு அதிகமானது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**5. <u>மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில்</u>:-**

1. விபத்து 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேக மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதா?
2. மனுதாரர் இழப்பீடு பெற உரியவரா, உரியவராயின் இழப்பீடு யாரால் செலுத்தப்படவேண்டும்?
3. மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை எவ்வளவு?

**6.** மனுதாரர் தரப்பில், மனுதாரர் சிவபெருமாள் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணமும் முன்னிடப்படவில்லை. விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவக்குழு வழங்கியுள்ள ஊனச்சான்றிதழ் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடப்பட்டுள்ளது.

**<u>7. பிரச்சனை 1-க்குரிய தீர்வு:-</u>**

(1). அசல் மனு, எதிர் உரை ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவை கவனமுடன் பரிசீலணை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள மனுதாரரான ம.சா.ஆ.1 சிவபெருமாள் தனது சாட்சியத்தில் கடந்த 08.03.2025 ம் தேதியன்று இரவு சுமார் 7.00 மணியளவில் மனுதாரர் விழுப்புரம் - செஞ்சி நெடுஞ்சாலையில் அசோகபுரி பேருந்து நிறுத்தத்திற்கு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டை கடக்க நடந்து சென்றுக்கொண்டிருந்தபோது அச்சமயம் விழுப்புரம் - செஞ்சி மார்க்கமாக தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்துக்கொண்டிருந்த 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN38BS1870 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர மோட்டார்



N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 10:47:30 +0530

சைக்கிள் வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், விபத்தில் மனுதாரருக்கு மற்றும் உடல் முழுவதும் பலவிதமான காயங்கள் ஏற்பட்டது என்றும், விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும், விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவும், அதிவேகமும், அஜாக்ரதையும்தான் காரணம் என்றும், எனவே எதிர்மனுதாரர்கள் தனக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் விபத்தை உறுதியூட்டும் வண்ணம் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு அதன்மேல் புலன்விசாரணை அதிகாரியால் விசாரணை செய்யப்பட்டு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக ம.சா.ஆ.6 இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இறுதி அறிக்கையில் விப்த்தில் ம்னுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயம் கொடுங்காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.1 சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் சம்பத்தகுந்ததாகவும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டும் உள்ளதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. இதனை மறுக்கும் விதத்திலும் மற்றும் முறியடிக்கும் விதத்திலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித கண்ணுற்ற சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

(2). முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1-ஆக குறியிடப்பட்டுள்ளது. மேற்படி விபத்து குறித்து விழுப்புரம் மாவட்டம், கெடார் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது இ.த.ச.பிரிவுகள் 281,125(a)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் ம.சா.ஆ.1-ன் முன்னிலைக்கு தெரியவருகிறது. மேற்படியான ஆவணத்தில் விபத்து நடந்த தேதி 08.03.2025 என்றும், வழக்கு பதிவு செய்யப்பட்ட நாள் 09.03.2025 என்றும், விபத்து ஏற்படுத்தியது TN38BS1870 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர மோட்டார் சைக்கிள் வாகன ஓட்டுநர் என்றும் விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது ம.சா.ஆ.1,2,3,4,5 மற்றும் ம.சா.ஆ.6 ஆகிய ஆவணங்களை காணும்போது தெரியவருகிறது. மேலும், மேற்கண்ட வாகனத்தின் உரிமையாளர் 1ஆம் எதிர்மனுதாரர் இல்லை என்றோ அந்த வாகனம் விபத்து சமயத்தில் 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்றோ 2ஆம் எதிர்மனுதாரரால் ம.சா.1-ன் குறுக்கு விசாரணையின்போது மறுத்துரைக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை, பதிவுச்சான்றிதழ், காப்பீட்டு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை, இறுதி அறிக்கை ஆகியவற்றை பரிசீலணை செய்ததில் விபத்து ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ள இருச்சக்கர மோட்டார் சைக்கிள் வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதும், விபத்து சமயத்தில் மேற்கண்ட வாகனம் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு வாகன காப்பீடு நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பதும், விபத்து மேற்கண்ட வாகனத்தின் எவ்வித இயந்திரக் கோளாறினாலும் ஏற்படவில்லை என்பதும், மேற்கண்ட

வாகனத்தின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இருந்துள்ளது என்பதும் தெளிவாக தெரியவருகிறது. எனவே மனுதாரர் தரப்பு சான்றாவணங்களின் வாயிலாகவும் மேற்படி விபத்தானது 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அலட்சியம், கவனக்குறைவு மற்றும் அஜாக்ரதையால்தான் ஏற்பட்டுள்ளது என்ற விவரம் மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் விபத்திற்கு காரணம் அல்ல என்றும், விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே 1ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. மனுதாரர்தான் ரோட்டிற்கு குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், விபத்திற்கு மனுதாரரும்தான் காரணம் என்றும், மனுதாரருக்கு ஏதேனும் இழப்பீடு வழங்கினால் இழப்பீட்டில் குறைந்தபட்சம் 25 சதவிகிதம் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும், விபத்து காயத்தினால் எந்தவதிமான வருமான இழப்போ நிரந்தர ஊனமோ ஏற்படவில்லை என்றும் 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. தனது கவனக்குறைவு விபத்திற்கு காரணம் அல்ல என்றும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் கட்டுப்படுத்தும் வேகத்தில் இல்லாமல் சாலையை கடந்த நபரின் மீது மோதியுள்ளது ஓட்டுநரின் கவனக்குறைவுதான் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. விபத்திற்கு மனுதாரரின் கவனக்குறைவு காரணம் அல்ல என்றும், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கட்டுப்படுத்தமுடியாத வேகம்தான் காரணம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், எனவே மனுவில் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

மனுதாரர் தரப்பு சாட்சிய விசாரணையின் வாயிலாகவும், சான்றாவணங்கள் வாயிலாகவும் மற்றும் குறுக்கு விசாரணையின் வாயிலாகவும் முதல் தகவல் அறிக்கை அம்சங்களையொட்டி சாட்சியம் அளித்துள்ள மனுதாரர்/ம.சா.1, விபத்து 1ஆம் எதிர்மனுதார் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்ரதையால்தான் ஏற்பட்டது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. முதல் தகவல் அறிக்கை அம்சங்களையொட்டி சாட்சியம் அளித்துள்ள மனுதாரர்/ம.சா.1, விபத்து 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்ரதையால்தான் ஏற்பட்டது என்று கூறியுள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில், விபத்து வேறு எவ்வாறு நடந்தது என்பது குறித்து அறிந்துகொள்ளும் விதமாக 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரோ அல்லது 3 ஆம் தரப்பு தனிநபர் சாட்சிகள் எவருமோ 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதா என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை. விபத்திற்கு காரணமான வாகனத்தின் ஓட்டுநரை எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்காத நிலையில், அந்த வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்று அனுமானம் கொள்ளலாம் என்பதனை

K.K.Jain & 7 others /vs/ Masroor Anwar & others 1990 ACJ 299

வழக்கில் மாண்புமிகு மத்தியபிரதேச உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. முதல் தகவல் அறிக்கையும், இறுதி அறிக்கையும் 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீதுதான் பதிவு செய்யப்பட்டுளள்து. எனவே மேற்சொன்ன காரணங்களால் மேற்கண்ட சூழ்நிலையில் 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இப்பிரச்சனைக்கு அவ்வாறே தீர்வு காணப்படுகிறது.

**8. பிரச்சனை 2-க்குரிய தீர்வு:-**

(1). பிரச்சனை-1 க்கு 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவே விபத்திற்கு காரணம் என்று தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் இழப்பீடு பெற அருகதையுடையவர். எனவே மேற்சொன்ன காரணங்களால் 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டாளர் 2 ஆம் எதிர்மனுதாரர் என்பதால் மனுதாரருக்கான இழப்பீட்டை 2 ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டுமென்று பிரச்சனை-2 க்கு தீர்வு காணப்படுகிறது.

**9. பிரச்சனை 3-க்குரிய தீர்வு:-**

(1). மனுதாரருக்கு அடிப்பட்டவுடன் விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் 08.03.2025 தேதி முதல் 25.03.2025 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், சிகிச்சைக்கு சென்றபோது மனுதாரருக்கு deformity in left leg ஏற்பட்டுள்ளது என்பதும், மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட காயம் கொடுங்காயங்கள் என சான்றளிக்கப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.7 விபத்து பதிவேட்டிலிருந்து தெரியவருகிறது. மேலும் மனுதாரருக்கு grade I compound both bone fracture in left leg ஏற்பட்டுள்ளது என்பதும், மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு 17.03.2025 தேதியில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள விவரமும் ம.சா.ஆ.8 விடுவிப்புச்சான்றிதழிலிருந்து தெரியவருகிறது.

(2). தி ப்ரான்ச் மேனேஜர், டாடா ஏஜஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட் எதிர் பிரபு மற்றும் ஒருவர் (C.M.A.No.2380-15-2016(1) TN MAC 609) வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை பின்பற்றி இந்நீதிமன்ற வேண்டுகோளின் பேரில் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் குழு மனுதாரரை பரிசோதித்து நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. அந்த ஊனச்சான்றிதழில் மனுதாரரை பரிசோதித்ததில், மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட compound both bone fracture right and left leg காயங்களின் விளைவாக மொத்தம் 18% தற்காலிக ஊனம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் மனுதாரருக்கு 18% தற்காலிக ஊனம் ஏற்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து கீழ்கண்டவாறு இழப்பீடு கணக்கிடப்படுகிறது.

**10. ஊனத்திற்கான இழப்பீடு :-**

இந்நிலையில் விபத்து சமயத்தில் மனுதாரரின் வயது 61 என்று மனுவில் கூறியுள்ள நிலையில், மனுதாரரின் ஆதார் அட்டையில் மனுதாரரின் பிறந்த தேதி 01.01.1963 என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு விபத்து சமயத்தில் பூர்த்தியடைந்த வயது 62 என்று தீர்மானிக்கப்படுகிறது. தற்போதையை வாழ்க்கை செலவின அடிப்படையில் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் ஜி.ரமேஷ் மற்றும் ஒருவர் (2013 (2) TN MAC 583) வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நிரந்தர ஊனத்தை பொறுத்தும், வருமானத்தை பொறுத்தும் இழப்பீட்டுத் தொகை கருத்தில்கொள்ளவேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது. மேலும் மனுதாரருக்கு 08.03.2025 தேதியில் ஏற்பட்ட விபத்தில் compound both bone fracture right and left leg காயங்களினால் மனுதாரருக்கு 18% தற்காலிக ஊனம் ஏற்பட்டுள்ளதால் மனுதாரரின் காயம் மற்றும் ஊனம் வயது ஆகியவற்றையும் அப்போதைய பணமதிப்பு ஆகியவற்றையும் கணக்கில்கொண்டு ஊனத்திற்கான இழப்பீட்டுத் தொகையை 1 சதவீதத்திற்கு ரூ.10,000/-என மாண்புமிகு உயர்நீதிமன்றம், சென்னை CMA.No.13/2025 dated 10.01.2025-ல் மாண்புமிகு நீதியரசர் எம்.தண்டபாணி அவர்கள் வழங்கிய தீர்ப்பின்படி சொல்லப்பட்டுள்ளது. எனவே நீ.ம.சா.1-ன்படி மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள 18% தற்காலிக ஊனத்திற்கு ரூ.10,000/- வழங்குவது சரியானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் இவ்வழக்கினை பொறுத்து தீர்மானித்து (18x10,000) = ரூ.1,80,000/- மனுதாரருக்கு ஊனத்திற்காக கிடைக்கதக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

**11. மனவலி மற்றும் வேதனைக்காக :-**

மனுதாரருக்கு விபத்தில் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு 18 நாட்கள் சிகிச்சை எடுத்துள்ளார். மேலும் மனுதாரருக்கு 18% தற்காலிக ஊனம் ஏற்பட்டுள்ளது. மேலும் மனுதாரருக்கு 1 அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட மேற்படி காயங்களுக்காக அதிகபடியான மனவலியும், உடல் வலியும், வேதனையும் ஏற்பட்டுள்ளதாலும் மனுதாரர் 61 வயதுடையவர் என்பதாலும் காயத்தின் தன்மையை கருத்தில்கொண்டு ரூ.50,000/- மனவலி மற்றும் வேதனைக்காக கிடைக்கதக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

**12. வருமான இழப்பு :-**

விபத்திற்கு முன்பு மனுதாரர் விவசாய கூலி வேலை செய்து மாதம் ரூ.25,000/- வரை சம்பாதித்து வந்ததாகவும், விபத்திற்கு பின்பு முன்பு போல் மேற்படி வேலைகளை செய்ய முடியவில்லை என்றும் ம.சா.ஆ.1-ஆல் கூறப்பட்டுள்ளது. எனினும், வருமானம் குறித்து ஆதாரங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் விவசாய கூலி வேலை செய்து வந்தார் என்பதற்கான சான்றாவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே முன்தீர்ப்புகள் நெறிப்படியும், மனுதாரரின் வயதை கணக்கில்கொண்டும் 2025-ல் மனுதாரரின் மாத வருமானம் ரூ.10,000/- என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே விபத்தின்போது ஏற்பட் காயங்களினால் மனுதாரர் குறைந்த பட்சம் 3 மாதமாவது வேலைக்கு செல்லாமல் தொடர் சிகிச்சையில் இருந்திருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் என்பதால் வருமான இழப்பிற்காக ரூ.30,000 (3x10,000) கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**13. ஊட்டச்சத்து :-**

மனுதாரர் சிகிச்சையிலிருந்தபோதும், சிகிச்சைக்காக பின்னிட்டு விபத்து காயங்களை

ஆற்றுவதற்காக அதிகப்படியான ஊட்டச்சத்துள்ள உணவுகளை எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளார். அந்த வகையில் அவர் ஊட்டச்சத்துணவு எடுத்துக்கொண்ட வகையில் அவருக்கு ஊட்டச்சத்துணவிற்காக ரூ.25,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**14.ஆடை சேத மதிப்பு** :-

மனுதாரருக்கு விபத்தின்போது அணிந்திருந்த ஆடை சேதத்திற்காக ரூ.1,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**15. போக்குவரத்து** :-

விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் போக்குவரத்து மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார் என்பதற்கான உறுதியூட்டப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும் விபத்து ஏற்பட்ட இடம், சிகிச்சை மேற்கொண்ட மருத்துவமனை ஆகியவற்றை கருத்தில்கொண்டு போக்குவரத்து ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**16. மருத்துவ பில்கள்** :-

மனுதாரருக்கு மருந்து வாங்கியதற்காகச் செலவு ஏற்பட்டதாக மனுதாரரால் கூறப்பட்டிருந்தாலும், அதுகுறித்து எவ்வித மருந்து ரசீதுகளும் மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் எவ்வித தொகையும் மனுதாரருக்கு இந்தத் தலைப்பில் கிடைக்கதக்கதல்ல என்று தீர்மானிக்கப்படுகிறது.

**17. உதவியாளர் ஊதியம்** :-

மனுதாரர் சிகிச்சைப் பெற்ற காலங்களில் அவருடன் உதவிக்கு ஒருவர் இருந்து இருக்க கூடும். அவருக்கான செலவை மனுதாரர் மேற்கொண்டிருப்பார். எனவே மனுதாரருக்கு உதவியாளர் தொகையாக ரூ.30,000/- கிடைக்கத்தக்கது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ஊனத்திற்கு | ரூ. | 1,80,000 |
| வலி, மனவேதனை | ரூ. | 50,000 |
| வருமான இழப்பு | ரூ. | 30,000 |
| ஊட்டச்சத்து | ரூ. | 25,000 |
| ஆடை சேதாரத்திற்காக | ரூ. | 1,000 |
| போக்குவரத்து செலவுக்காக | ரூ. | 10,000 |
| உதவியாளர் ஊதியம் | ரூ. | 30,000 |
| **மொத்த ம்** | **ரூ.** | **3,26,000** |

மேற்கண்டவாறு மனுதாரருக்கு மொத்தம் ரூ.3,26,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து

இருபத்தாறாயிரம் மட்டும்) ஒட்டுமொத்த இழப்பீடாகக் கிடைக்கத்தக்கது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட 2025(2) TNMAC 14 (Del.) என்ற மாண்புமிகு டெல்லி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பானது இவ்வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்தாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களால் 18 சதவிகித தற்காலிக ஊனம் ஏற்பட்டுள்ளது என்பது நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழிலிருந்து தெரியவருகிறது. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கட்டுப்படுத்த முடியாத வேகம் தான் விபத்திற்கு காரணம் என இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

**18.** இறுதியாக, இம்மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் ஒட்டுமொத்த இழப்பீடாக ரூ.3,26,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தாறாயிரம் மட்டும்)-மும் மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் காலம் வரை வருடத்திற்கு 7.5 சதவிகித வட்டியுடன் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

PARMINDER SINGH VS HONEY GOYAL AND OTHERS (S.L.P.No.(c) No.4484 of 2020) Dated-18.03.2025 வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அறித்த தீர்ப்பின்படியும் மற்றும் The Hon'ble Court, Madras in ROC.No.55584/2025/S.Ct., dated 02.07.2025 மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டியின்படியும், மேற்படி ரூ.3,26,000/- இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் Name – Sivaperumal, UCO Bank, Mundiyampakkam, A/c.No.01940110108369, IFSC No.UCBA0000194 நேரடியாக வங்கி பண மாற்று முறையான NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் செலுத்தவேண்டும் என உத்தரவிடப்படகிறது.

TN MACT விதிகள் 1989 இன் விதி 20 துணை விதி 4-ன் படி, மனுதாரர் தனது வழக்கறிஞருக்கு பணம் செலுத்த ரூ.19,020/- வழக்கறிஞர் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.19,020/-, மனுதாரர் செலுத்திய நீதிமன்றக்கட்டணம் ரூ.373/- மற்றும் செலவுத் தொகை ரூ.74/-ஆக மொத்தம் ரூ.19,467/-ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் Name – Sivaperumal, UCO Bank, Mundiyampakkam, A/c.No.01940110108369, IFSC No.UCBA0000194 நேரடியாக வங்கி பண மாற்று முறையான NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் செலுத்தவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

மனுதாரர் செலுத்தவேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.2,633/- மனுதாரர் நீதிமன்றக் கட்டணமாக ரூ.373/- செலுத்தியுள்ளார். மனுதாரர் செலுத்தவேண்டிய இழப்பீடு தொகைக்குரிய குறைவு நீதிமன்றக்கட்டணம் ரூ.2,260/- ஆகும். மனுதாரர் செலுத்த வேண்டிய குறைவு நீதிமன்றக்


N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2026.07.31 10:48:07 +0530

கட்டணம் ரூ.2,260/-ஐ 2 ம் எதிர்மனுதாரர் தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு E-Court fees link pay.ecourts.gov.in என்ற இணையதளத்தின் மூலம் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேற்படி இழப்பீட்டு தொகை, வழக்கறிஞர் ஊதியம், வழக்குச் செலவு தொகை, குறைவு நீதிமன்ற கட்டணம் செலுத்தியதற்கான ரசீதை 2 ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

வழக்கு தரப்பினர்களுக்கு சான்றிடப்பட்ட தீர்ப்பு நகல் இலவசமாக வழங்க உத்தரவிடப்படுகிறது.

**<u>செலவுத் தொகை பட்டியல்</u>**

| | மனுதாரர் | ரூ. | 2 ம்எதிர்மனுதாரர் | ரூ. |
|---|---|---|---|---|
| 1. | வக்காலத்து | 10.00 | | |
| 2. | படிசெலவு | 9.00 | | |
| 3. | ஆவணங்கள் மீது ஸ்டாம்பு | 55.00 | | |
| 4. | நீதிமன்ற கட்டணம் | 2,633.00 | | |
| 5. | வழக்கறிஞர் கட்டணம் | 19,020.00 | | |
| | மொத்தம் | 21,727.00 | | |

இவ்வுத்தரவானது சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைத்திருத்தம் செய்து இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 10:48:18 +0530

சிறப்பு சார்பு நீதிபதி எண்.1,
( மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்கு)
சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1, விழுப்புரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**:-

ம.சா.1 - சிவபெருமாள்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**:-

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 09.03.2025 | முதல் தகவல் அறிக்கை. | ஒளி நகல். |
| ம.சா.ஆ.2 | - | 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ். | ஒளி நகல். |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.3 | - | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ். | ஒளி நகல். |
| ம.சா.ஆ.4 | - | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை. | ஒளி நகல். |
| ம.சா.ஆ.5 | - | 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம். | ஒளி நகல். |
| ம.சா.ஆ.6 | - | இறுதி அறிக்கை. | ஒளி நகல். |
| ம.சா.ஆ.7 | 08.03.2025 | விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையால் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு. | ஒளி நகல். |
| ம.சா.ஆ.8 | 25.03.2025 | விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையால் வழங்கப்பட்ட விடுவிப்புச்சான்றிதழ். | ஒளி நகல். |
| ம.சா.ஆ.9 | 22.07.2025 | விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையால் வழங்கப்பட்ட மருத்துவ குறிப்பு சீட்டு. | ஒளி நகல். |
| ம.சா.ஆ.10 | - | மனுதாரரின் ஆதார் அட்டை. | ஒளி நகல். |
| ம.சா.ஆ.11 | - | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம். | ஒளி நகல். |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:-**

.. இல்லை ..

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-**

.. இல்லை ..

**நீதிமன்ற சான்றாவணம்:-**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | - | விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் குழு வழங்கிய ஊனச்சான்றிதழ்/அறிக்கை. |

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2026.07.31 10:48:25 +0530

சிறப்பு சார்பு நீதிபதி எண்.1,

( மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்கு)

சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1, விழுப்புரம்.